# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சே. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 0100/2017/ந

ஆணை எண்: 128/2017

நாள்: 20/05/2017

திரு. டி.ஏ. பாலசுப்பிரமணியம்,
நகராட்சி பொறியாளர் (ஓய்வு),
89A, கிழக்கு லோக்மான்ய தெரு,
ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் - 641 002. - முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
நாமக்கல் நகராட்சி. - எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 26.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு 03.05.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று முறையீட்டு மனு எண்.0100/17 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி மனுவுடன், மனுதாரர் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும், நாமக்கல் நகராட்சி ஆணையருக்கும் தனது பணிக்கொடை தொடர்பாக அனுப்பிய கடித நகல்களை இணைத்தனுப்பியுள்ளார். அவருக்கு பணிக்கொடையை (DCRG) தாமதமாக வழங்கியமைக்காக 63 மாத வட்டித் தொகையாக ரூ.10,868/-ஐ வழங்கிட வேண்டுமென அவரது 15.12.2014 நாளிட்ட கடிதத்தில் நாமக்கல் நகராட்சி ஆணையரை எதிர்மனுதாரராக இம்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

முறையீட்டு மனுதாரரது இக்கோரிக்கை முற்றிலும் பணியமைப்பு தொடர்பானதாகும். எனவே, மனுதாரரது மனு குறித்து அரசாணை/விதிகளின்படி பரிசீலித்து தக்க ஆணைகள் பிறப்பித்து மனுதாரருக்கு தக்க பதிலினை வழங்கிடுமாறு நாமக்கல் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

எனவே, உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற சட்டம் 10 (4) (c)ன்படி பரிகாரம் பெற வேறு ஒரு வழி இருக்கும்போது இந்த அமைப்பை நாட வேண்டியதில்லை. மனுதாரர், தேவையெனக் கருதும் பட்சத்தில் பணியமைப்பு தொடர்பான இப்பொருள் குறித்து துறைத் தலைமைக்கு மேல்முறையீடு செய்து கொள்ளுமாறும் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒப்பம்/-
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   நாமக்கல் நகராட்சி,
   நாமக்கல் மாவட்டம்.

2. திரு. டி.எ. பாலசுப்பிரமணியம்,
   நகராட்சி பொறியாளர் (ஓய்வு),
   89A, கிழக்கு லோக்மான்ய தெரு,
   ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் - 644 009.

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   எழிலகம், சேப்பாக்கம்,
   சென்னை – 600 005.